# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024

Prosecution Witness -P.W. 6

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முருகன் |
| Father's Name | : | R. Manickam |
| Village | : | Manacaud |
| Taluk | : | Attukal |
| Caste | : | Vishwakarma |
| Calling | : | Auto Driver |
| Religion | : | Hindu |
| Age | : | 58 |
| Date | : | 12.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர். )

<u>12.06.2024</u>

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது திருவனந்தபுரம் மணக்காட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கு தொழில் ஆட்டோ ஓட்டுவது. இந்த வழக்கு சம்பவத்தில் இறந்து போன மனோஜ் என்பவர் என் தங்கை மகன். 28.08.2023 அன்று 9.30 மணியளவில் ராஜ கோபால் போனில் கூப்பிட்டு தம்பி இறந்து விட்டதாக தகவல் சொன்னார். பஸ்ஸில் 12.30 மணியளவில் வந்து சேர்ந்தோம். வெட்டூர்ணிமடத்தில் உள்ள மருத்துவமனைக்கு சென்றோம். பெயர் ஞாபகம் இல்லை. போலீசார் 2.00 மணி போல் வந்தார்கள். போலீசார் குத்திய இடம் எல்லாம் பார்த்து எழுதிக் கொண்டார்கள். பிள்ளையின் டிரஸ்ஸை எடுத்துக்

கொண்டார்கள். ஒப்பம் பெற்றார்கள். நானும், வினுவும் கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் வ.சா.ஆ. 4 ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. இரண்டாவது கையொப்பம் வினு உடையது. வினு என்பவர் எனது மகன். தற்போது சாட்சி சொல்லி சென்றவர். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 4 மற்றும் 5 ம் அப்போது கைப்பற்றப்பட்ட உடைகள்தான். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-

எனக்கு எவ்வளவு நாட்களாக காது கேட்காது என்றால் இரண்டு வருடங்களாக கேட்காது. போலீஸ் விசாரிக்கும்போது எனக்கு காது கேட்காது என சொன்னேனா என்றால் தூரத்தில் இருந்தால் கேட்காது அதை சொன்னேன். போலீசார் விசாரிக்கும்போது காதும் கேட்காது என்று அவர்களிடம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சம்மனில் உள்ளது என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல என்னுடையதுதான். நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சம்மனில் உள்ள கையொப்பத்திற்கும் வா.சா.ஆ. 4 ல் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் உள்ள கையொப்பத்தில் முருகன் என்பதில் K பயன்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் சம்மனில் உள்ள கையொப்பத்தில் G பயன்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். நான் இறந்து நபரின் உடலிருந்து சட்டையை எடுக்கும்போது பார்க்கவில்லை என்றால் சரியல்ல. பார்த்தேன். போலீசார் தான் எடுத்து காண்பித்தார்கள் என்றால் ஆமாம். சட்டையின் அளவு பேண்டின் அளவு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா. 4 அத்தாட்சியல் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்றாலும் நான் சொல்லியவாறு எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் சொல்லிக் கொடுத்து இறந்த நபர் எனது உறவினர் என்பதால் என்னுடைய கையொப்பம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைன் கையொப்பம் செய்ததாக சொல்லும் வினு என்று ஒரு நபரே கிடையாது

என்றால் சரியல்ல. இன்றைய தினம் சாட்சியம் அளிப்பதற்கு ராஜ கோபால் தான் கூட்டி வந்தார் என்றால் சரிதான். வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.